AGASTYA INTERNATIONAL FOUNDATION
SUPPORTED BY R. JHUNJHUNWALA FOUNDATION & OTHERS

101, Varsav Plaza
#12 Jayamahal Main Road
Bangalore 560046, India
Tel No : +9180-41124132 / 23545054
www.agastya.org

**பெறுநர்**

**உயர்திரு முதன்மைக் கல்வி அலுவலர் அவர்கள்,**
முதன்மைக் கல்வி அலுவலகம்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

**மதிப்பிற்குரிய ஐயா / அம்மையீர்,**

**பொருள் :**

1. அரசு (நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை) பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் கணித பாடங்களை இணையவழிக் கல்வி **Whatsapp, Google Meet** மூலம் செயல்வழி கற்றல் முறையில் வகுப்பு எடுக்க **2021-22** கல்வி ஆண்டிற்கு அனுமதி கோருதல் சார்பாக.

Ref: Tamilnadu Education Commissioner Permission vide letter No.01424/M/E2/2019 dated 22-07-2021 for the academic year 2021-22

---

அகஸ்தியா இன்டர்நேஷனல் பவுண்டேஷன் கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு இந்தியாவில் 20 மாநிலங்களிலும் தமிழகத்தில் 12 மாவட்டங்களிலும் அரசு அனுமதியோடு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த பத்து வருடங்களாக அகஸ்தியா **Mobile Science Lab(MSL), Science Centre(SC), Yong Instructor Leader(YIL) and Lab On a Bike(LOB)** ஆகிய திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது, இப்பள்ளிகளில் நான்காம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு நேரடி கற்பித்தல் முறையில் அறிவியல் பாடத்தினை கற்பித்து வருகின்றது.

**COVID-19** தொற்று நோயின் காரணமாக தமிழக மக்கள் மிகவும் துன்பத்தில் ஆழ்ந்துள்ளனர் அதிலும் குறிப்பாக மாணவர்களின் கல்வி கற்றலின் மீதான ஆர்வமும் மிகவும் குறைந்துள்ளது எனவே அகஸ்தியா

AGASTYA
INTERNATIONAL FOUNDATION
SUPPORTED BY R. JHUNJHUNWALA FOUNDATION & OTHERS

101, Varsav Plaza
#12 Jayamahal Main Road
Bangalore 560046, India
Tel No : +9180-41124132 / 23545054
www.agastya.org

இன்டர்நேஷனல் பவுண்டேஷன் நிறுவனமானது வேலூர் மாவட்டத்தில் அரசுப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவசமாக இணையவழிக் கல்வி Whatsapp, Google Meet மூலம் வழங்க திட்டமிட்டுள்ளது.

எனவே தாங்கள் வேலூர் மாவட்டத்தில் அரசு பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அறிவியல் & கணித பாடங்களை செயல்வழி கற்றல் முறையில் வகுப்பு எடுக்க 2021-22 கல்வி ஆண்டிற்கு அனுமதி வழங்குமாறும் மற்றும் வேலூர் மாவட்ட நடுநிலை உயர்நிலை மேல்நிலைப் பள்ளி விவரங்களை தலைமை ஆசிரியர் தொலைபேசி எண்ணுடன் வழங்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு

Mohandass.V
Area Lead,
Agastya International Foundation,
Chennai Region.
Cell – 80728 91710 / 76677 57605,
Email Id – mohandass.agastya@gmail.com